வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண்.2513/இ2/2019 நாள் .05.2019

| | |
|---|---|
| பொருள் – | குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்–2019–2020ம் கல்வியாண்டில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினர் – 25% இடஒதுக்கீட்டில் உள்ள காலி இடங்களை விட அதிகமான அளவில் விண்ணப்பிக்கப்பட்ட பள்ளிகளில் விண்ணப்பித்த மாணவர்களுக்கு 06.06.2019 அன்று காலை 11.00 குலுக்கல் முறையில் சேர்க்கை மேற்கொள்வதற்கான அறிவுரைகள் வழங்குதல் – சார்பு |
| பார்வை – | 1. குழந்தைகுளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2011<br>2. அரசாணை நிலை எண்.60 பள்ளிக்கல்வி(எக்ஸ்2)துறை நாள் 01.04.2013<br>3. அரசாணை நிலை எண்.66 பள்ளிக்கல்வி(பொநு2)துறை நாள் 07.04.2017<br>4. குழந்தைகுளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மை தொடர்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் , சென்னை–06 ந.க.எண்.843/இ1/2019 நாள். .05.2019. |

---

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் செயல்முறைகளுக்கிணங்க , குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்–2009ன் படி 2019–20ம் கல்வி ஆண்டில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் விண்ணப்பித்த குழந்தைகளுக்கு 25% இடஒதுக்கீட்டில் உள்ள காலி இடங்களை விட அதிகமான எண்ணிக்கையில் விண்ணப்பிக்கப்பட்ட பள்ளிகளில் விண்ணப்பித்த மாணவர்களுக்கு 06.06.2019 அன்று காலை 11.00 மணிக்கு குலுக்கல் முறையில் சேர்க்கை மேற்கொள்வதற்கு கீழ்கண்ட அறிவுரைகள் பின்பற்றுமாறு சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி மெட்ரிக் / நர்சரி (ம) தொடக்கப்பள்ளி முதல்வர்கள் மற்றும் தாளாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. இடஒதுக்கீட்டில் உள்ள காலி இடங்களை விட அதிகமான அளிவில் விண்ணப்பிக்கப்பட்ட பள்ளிகளில் விண்ணப்பித்த தகுதியான மாணவர்களுக்கு 06.06.2019 அன்று காலை 11.00 மணிக்கு குலுக்கல் முறையில் சேர்க்கை மேற்கொள்ளவேண்டும்.
2. வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள, ஆதரவற்றவர்/எச்.ஐ.வி ஆல் பாதிக்கப்பட்டவர் / மூன்றாம் பாலினத்தவர் / துப்புரவு தொழிலாளியின் குழந்தை/ மாற்றுத் திறனாளிகள் போன்றோரிடமிருந்து பெறப்பட்ட தகுதியான விண்ணப்பங்களுக்கு குலுக்கல் நடத்துவதற்கு முன்னரே சேர்க்கை வழங்கிட வேண்டும்.
3. முதன்மைக் கல்வி அலுவலரால் நியமிக்கப்படும் துறை பிரதிநிதி முன்னிலையில் குலுக்கல் நடைபெறவேண்டும்.
4. 25% இடஒதுக்கீட்டினை விட அதிகமான எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்ட பள்ளிகளில் பார்வை 3ல் கண்ட அரசாணையில் வழங்கப்பட்டுள்ள கூடுதல் வழிகாட்டுதல்களை பின்பற்றி தகுதியான விண்ணப்பங்களுக்கு 06.06.2019 அன்று குலுக்கல் முறையில் 25% இடங்களுக்கான தெரிவும், ஒவ்வொரு பிரிவிற்கும் 5 இடங்களுக்கான காத்திருப்பு பட்டியல் தெரிவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
5. குலுக்கல் மூலம் தேர்வு செய்யப்பட்ட குழந்தைகள் பெயர் பட்டியல் மற்றும் காத்திருப்பு பெயர் பட்டியலில் குலுக்கலின் போது இருந்த ஆய்வு அலுவலர், பள்ளியின் தலைமை ஆசிரியர் /பள்ளி முதல்வர், குறைந்தபட்சம் இரண்டு பெற்றோர்கள் கையொப்பமிட வேண்டும்.